**செய்தி வெளியீடு எண் : 451** **நாள் : 04.03.2023**

**கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இன்று ரூ.52.40 கோடி செலவில் முடிவுற்ற 23 திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.114.16 கோடி மதிப்பீட்டிலான 39 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,22,019 பயனாளிகளுக்கு ரூ.267. 43 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.**

**பின்னர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

கரூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ரூ.267 கோடி மதிப்பில் அரசு நலத்திட்டம் வழங்கும் மிகப் பிரமாண்டமான அரசு விழாவில் கலந்து கொள்வது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த நிகழ்ச்சியை மிக பிரம்மாண்டமாக ஒருங்கிணைத்துள்ள மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையை சொல்ல வேண்டுமென்றால் சிறப்பு விருந்தினர்கள் ஆகிய பயனாளிகள் நீங்கள்தான். இவ்விழாவிற்கு வருகை தந்துள்ள அக்கா, அம்மா, தங்கைகளே உங்கள் அனைவருக்கும் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்களுக்கு நிகராக உழைத்து குடும்பங்களை காக்கும் பெண்களாகிய உங்களையெல்லாம் பார்ப்பது எனக்கு உள்ளபடியே மகிழ்ச்சி அளிக்கிறது. கரூர் என்றாலே எப்போதுமே சிறப்பு தான் ஒரு வேலையை கரூரில் தொடங்கினால் அது எப்போதுமே வெற்றியில் தான் முடியும். அதற்கு உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால் அரசு பள்ளியில் படிக்கும் இரண்டு மாணவிகள் சரளமாக நம்முடன் ஆங்கிலத்தில் பேசியது தான் அத்துடன் கரூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு திட்டங்கள் மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம் முன் உதாரணமாக செயல்பட்டு வருகிறது. நீங்கள் அனைவரும் உழைப்பின் மீதும் உங்கள் மீதும் வைத்திருக்கிற நம்பிக்கையின் காரணமாகத்தான் இந்த கரூர் மாவட்டம் வளர்ச்சி பாதையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது. எந்த வேலையை எடுத்தாலும் அதை சிறப்பாகவும் பிரமிக்கத்தக்க வகையிலும் செய்து முடிப்பவர்தான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் செந்தில் பாலாஜி அவர்கள். அவருடைய வெற்றிக்கும் அவருடைய உழைப்பிற்கும் நீங்கள் தான் ஆதாரம் அதற்காக உங்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தனது அரசியல் பயணத்தை தனது சட்டமன்ற உறுப்பினர் பயணத்தை இதே கரூர் மாவட்டத்தில் இருந்து தான் தொடங்கினார். கலைஞர் அவர்கள் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தாலும் 13 முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டாலும் 80 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரராக இருந்தாலும் அவர் முதன் முதலில் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டது இந்த கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் தான். இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் நான் சட்டமன்ற தொகுதியில் நிற்பதற்கான முடிவெடுத்தபோது

அண்ணன் செந்தில் பாலாஜி அவர்கள் நீங்களும் குளித்தலை தொகுதியில் தான் நிற்க வேண்டும் அங்கு தான் முதன் முதலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நின்று வெற்றி பெற்றார்கள் என்று என்னை கேட்டுக் கொண்டார்கள். சேப்பாக்கம் திருவல்லிக்கேணி போன்ற தொகுதிகளிலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நின்று வென்ற தொகுதியில் தான். அது ஒரு சிறிய தொகுதி அதில் விரைவாக எனது பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு பிற மாவட்டங்களுக்கு பிரச்சாரத்திற்கு போவதற்கு வசதியாக இருக்கும் என்று சொன்னேன். சொன்னது போலவே கரூர் மாவட்டத்தில் அனைத்து தொகுதிகளிலும் அண்ணன் செந்தில் பாலாஜி அவர்கள் வெற்றி வாகை சூடி உள்ளார்கள். கரூர் மாவட்டத்திற்கு நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்திற்காகவும் பல்வேறு அரசியல் நிகழ்ச்சிக்காகவும் வருகை புரிந்திருக்கிறேன். ஆனால் தற்போது தான் நான் அமைச்சராக பொறுப்பேற்ற பின்பு உங்கள் ஆசியோடு கரூர் மாவட்டத்திற்கு முதல் முதலாக வந்திருக்கிறேன்.

கரூர் மாவட்டம் ஒரு தொழில் நகரம் உழைக்கும் மக்கள் நிறைந்த நகரம் அதேபோல் பேருந்து கட்டுமானத்திலும் சிறந்து விளங்குகிறது. கொசுவலை தொழில் உற்பத்தியில் தமிழகத்திற்கு மட்டுமல்ல அது இந்தியாவிற்கு முன்னோடியாக உள்ளது. கரூர் மாவட்டம் ஆண்டுக்கு ரூ.1800 கோடி மதிப்பில் கொசு வலை தயாரிப்பில் முதலீடு செய்யப்படுகிறது. அதேபோல் ஆண்டுக்கு ரூ.3,000 கோடி மதிப்பில் போர்வை தயாரித்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஒரு பக்கம் விவசாயம், மறுபக்கம் தொழில் என பல்வேறு வகையில் கரூர் மாவட்டம் சிறந்து விளங்குகிறது. அதற்குக் காரணம் உங்களுடைய உழைப்பு தான் கடந்த ஐந்து வருடங்களில் திராவிட முன்னேற்ற கழகம் எதிர்கொண்ட அனைத்து தேர்தலிலும் கரூர் மாவட்டம் வெற்றி கண்டு வருகிறது. அதற்கு சாட்சியாக சமீபத்தில் நடந்த ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தல் வெற்றி ஆகும். இந்த அரசு அமைந்து தலைவர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற கொண்ட பிறகு சொன்னது இந்த அரசுக்கு வாக்களித்தவர்களுக்கும் உழைப்போம், வாக்களிக்காதவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்கவில்லையே என்று வருத்தப்படும் அளவிற்கு எங்களுடைய எண்ணமும் உழைப்பும் இருக்கும். அதற்கு ஏற்றார் போல் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயல்பாடுகள் நாள்தோறும் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு கடந்த ஆட்சியில் கிடப்பில் போடப்பட்ட விவசாயிகளின் மின் இணைப்பு விண்ணப்பங்களை எடுத்து அதன் மீது நடவடிக்கை கொண்டு மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி அவர்களின் முன்னெடுப்பு காரணமாக தற்போது 1,50,000 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. 1,00,000 ஆவது மின் இணைப்பை சென்னையில் நானும் தலைவரும் வழங்கினோம். அதே போல 1,50,000 ஆவது மின் இணைப்பை இதே கரூர் மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். கரூர் மாவட்டத்தில் மட்டும் 3,450 விவசாயிகள் இலவச மின் இணைப்பு பெற்றுள்ளார்கள். அதன் மூலம் 7,700 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் நடைபெற்று வருகிறது. அதேபோல் தலைவர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் கூறியிருந்தார்கள் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி அமைத்தால் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி செய்து தரப்படும் என்று ஆட்சிக்கு வந்தவுடன் தலைவர் அவர்கள் கையெழுத்திட்ட முதல் கோப்பு பெண்களுக்கு கட்டணம் இல்ல பேருந்து வசதி செய்து கொடுத்தது தான். அதன் காரணமாக இந்த 20 மாதங்களில் 250 கோடி கட்டணமில்லா பயணங்கள்

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த கரூர் மாவட்டத்தில் மட்டும் 31 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல மாவட்டங்களில் இந்த கட்டணமில்லா பேருந்துகளுக்கு ஸ்டாலின் பஸ் என்று எல்லோரும் பெயர் வைத்து உள்ளார்கள். அந்த அளவிற்கு இந்த திட்டம் தாய்மார்களுக்கு போய் சேர்ந்து இருக்கிறது. அதேபோல் காலை சிற்றுண்டி திட்டம் வெற்றி உங்களுக்கு தெரியும். இரண்டு நாட்களுக்கு முன்பு வரை 1.50 லட்சம் மாணவர்கள் பயன் பெற்று வந்தார்கள். ஒன்றாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள் காலையில் பள்ளிக்கு வரும்போது சாப்பிடாமல் வரக்கூடாது எனவும், சாப்பிட்ட பின்பு தான் படிக்க வேண்டும் எனவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நான் எங்கு சென்றாலும் காலையில் அரசு பள்ளிகளில் தான் சாப்பிடுகிறேன். சாப்பாடு சரியான நேரத்திற்கு வருகிறதா, தரமாக இருக்கிறதா, மாணவர்களின் வருகை அதிகரித்து உள்ளதா என ஆய்வு செய்ததாகவும் இருக்கும், அதோடு சாப்பிட்டதாகவும் இருக்கும்.

கரூர் மாவட்டத்திற்கு வரும்போது அண்ணன் செந்தில் பாலாஜி அவர்களிடம் கேட்டேன் பக்கத்தில் ஏதாவது பள்ளிக்கூடம் இருந்தால் சொல்லுங்கள் காலையில் போய் சாப்பிட்டு விட்டு வந்து விடலாம் என்று அதற்கு அவர் இன்று சனிக்கிழமை பள்ளிகள் விடுமுறை என்று சொல்லிவிட்டார். இந்த சிறப்பான திட்டம் தற்போது விரிவுபடுத்தப்பட்டு இரண்டு லட்சம் மாணவர்கள் பயன் பெற்று வருகிறார்கள். இந்த திராவிட மாடல் ஆட்சியில் கல்விக்கும் மருத்துவத்திற்கும் முதலிடம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல் புதுமை பெண் திட்டம் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவாக அரசு பள்ளிகளில் படித்து, கல்லூரிக்கு செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 அவர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. ஒரு தந்தையின் இடத்திலிருந்து முதல்வர் அவர்கள் இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள். இதனால் கல்லூரி செல்லும், உயர்கல்வி படிக்கும் மாணவிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருக்கிறது. உங்களுடைய முதலமைச்சர் அவர்கள் பெண் கல்விக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார் என்று இதன் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளலாம். முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலத் திட்டங்களை பட்டியலிட்டால் இங்கு நேரம் போதாது இருந்தாலும் சில திட்டங்களை நான் இங்கு குறிப்பிடுகிறேன். இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், நான் முதல்வன் திட்டம், "இன்னுயிர் காக்கும் நம்மை காக்கும் 48" சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரம் இலவசமாக சிகிச்சை அளிக்கும் திட்டம். இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம். அதேபோல் சிறு நகை கடன், விவசாய கடன், மகளிர் சுய உதவி கடன் தள்ளுபடி என பல்வேறு திட்டங்களை இந்த 20 மாத காலத்தில் திராவிட மாடல் அரசு செய்து கொண்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் இந்த திட்டங்களை கரூர் மக்களும் பெரும்பகுதி பயன்பெற்று வருகிறார்கள்.

இதைத் தவிர கரூருக்கு என்று பல்வேறு சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகை கடன், பயிர் கடன், மகளிர் சுய உதவி குழு கடன் தள்ளுபடி சம்பந்தமாக நான் ஏற்கனவே கூறி இருந்தேன். தள்ளுபடிக்கு பிறகு கரூர் மாவட்ட மக்களின் மேம்பாட்டிற்காக கூட்டுறவுத் துறையின் சார்பாக 1,01,096 பயனாளிகளுக்கு ரூ.8.30 லட்சம் மதிப்பிலான பயிர் கடன், நகை கடன், கால்நடை பராமரிப்பு கடன் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு ஒரு வேளாண்மை கல்லூரி வேண்டும்

என்று கேட்டார் அது வழங்கப்பட்டு தற்போது இரண்டாம் ஆண்டு சேர்க்கை நடைபெற்று கல்லூரி நடைபெற்று வருகிறது. அரவக்குறிச்சி பகுதியில் ஒரு கலைக்கல்லூரி, அதேபோல் கரூர் நகராட்சியை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சியாக தரம் உயர்த்தி உள்ளார்கள். அதேபோல் பள்ளபட்டி மற்றும் புகலூர் பேரூராட்சிகளை தரம் உயர்த்தி நகராட்சிகளாக அறிவித்துள்ளார்கள். ரூ.40 கோடி மதிப்பில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் புதிய பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டில் தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. அதேபோல் காமராஜர் தினசரி காய்கறி மார்க்கெட் பகுதியில் ரூ.6.80 லட்சம் மதிப்பில் முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. மாயனூரில் கலைஞர் அவர்கள் ஒரு டி.எம்.சி. தண்ணீர் தேக்கும் அளவிற்கு கதவணைகளை அமைத்தார் என்றால் அவருடைய மகன் நம்மளுடைய முதலமைச்சர் அவர்கள் குளித்தலை தொகுதி மருதூரிலும், கரூர் தொகுதி நெரூரிலும் ரூ.1,460 கோடி மதிப்பில் இரண்டு கதவணைகள் அமைப்பதற்காக அறிவித்துள்ளார்கள். அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. அதேபோல் 107 ஏக்கர் பறந்து விரிந்து உள்ள தாதாம்பாளையம் ஏரியை சீரமைக்க வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கு ரூ.15 கோடியை ஒதுக்கி உள்ளார்கள். அதேபோல் வெள்ளியணை, பஞ்சப்பட்டி ஏரிகளை தூர்வார முதல்கட்ட நிதியினை நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒதுக்கி உள்ளார்கள்.

நான் பொறுப்பு வைக்கின்ற விளையாட்டுத் துறையில் இந்த மாவட்டத்தில் பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக முதலமைச்சர் அவர்களின் பெயரில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டி இந்த மாவட்டத்தில் நடைபெற்று உள்ளது. ரூ.51 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து இந்தப் போட்டிகளில் 12,332 வீரர்– வீராங்கனைகள் கலந்து கொண்டு உள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புதிதாக சிறப்பான ஒரு அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார்கள். இந்த கரூர் மாவட்டம் நெசவாளர்கள் நிறைந்த மாவட்டம் ஆக இருப்பதால் இதை நான் இங்கு நினைவு கூற விரும்புகிறேன். விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட் மின்சாரம் என முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள், அதை நம்முடைய முதல்வர் அவர்கள் தேர்தல் வாக்குறுதி படி 1000 யூனிட்டாக அறிவித்துள்ளார்கள். அதேபோல் கைத்தறி நெசவாளர்களுக்கு 250 யூனிட் இலவசம் மின்சாரம் என்பதை தற்போது 50 யூனிட் அதிகரித்து 300 யூனிட் இலவசம் மின்சாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆண்டுக்கு ரூ.52 கோடி அரசுக்கு கூடுதல் செலவாகிறது. இதையெல்லாம் எதற்கு நான் சொல்கிறேன் என்றால் தேர்தல் நேரத்தில் மட்டும் நாங்கள் உங்களை சந்திப்பவர்கள் அல்ல உங்களுக்காக உழைப்பவர்கள் தான் இந்த அரசு திராவிட முன்னேற்ற கழகம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இதேபோல் சமீபத்தில் நடந்த மிகப் பிரமாண்டமான அரசு விழாவில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை சமீபத்தில் வழங்கி உள்ளார்கள்.

அதேபோல் கரூர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பாக ரூ.52 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 23 பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரூ.114 கோடி மதிப்பில் 39 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதேபோல் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 200 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா, 23 ஆயிரம் பயனாளிகளுக்கு இணையதள பட்டா, 68 பயனாளிகளுக்கு விபத்து நிவாரணம், 4000 விவசாயிகளுக்கு பயிர் கடன், 2350 பயனாளிகளுக்கு கால்நடை பராமரிப்பு கடன், 1734 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன், 484 பயனாளிகளுக்கு நலிவுற்றோர் நல உதவி, 1120 பயனாளிகளுக்கு சுழல் நிதி, 2000 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு திட்ட உதவி, 8,578 பயனாளிகளுக்கு முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி என மொத்தம் 1,22,019 பயனாளிகளுக்கு ரூ.267.43 கோடி மதிப்பீட்டில் விழாவிலே வழங்கப்படுகிறது. இதுதான் கரூர் மாவட்ட மக்களின் மீது இந்த அரசு வைத்திருக்கும் அன்பிற்கான எடுத்துக்காட்டு. என்னுடைய துறையில் மகளிர் சுய உதவி குழுவினரும் வருகிறார்கள். கரூர் மாவட்டத்தில் மிகச் சிறப்பான முறையில் பல்வேறு மகளிர் சுய உதவி குழுவினர் சிறப்பாக தொழில் செய்து வருகிறார்கள்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் தொடங்கிய வெற்றி சமீபத்திய ஈரோடுகிழக்கு தொகுதி வெற்றி வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அதற்கு முதல் காரணம் அவர் மீது நீங்கள் எல்லாம் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை. அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார். நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை மட்டும் அல்ல இதுதான் சொல்லாததையும் செய்து காட்டுவது தான் இந்த ஸ்டாலின் பாணி என அறிவித்து எண்ணிலடங்கா மக்கள் நல திட்டங்களை தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு வருகிறது. நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர் அண்ணன் செந்தில் பாலாஜி அவர்கள் நம்முடைய முதலமைச்சருக்கு தளபதிகளாக இருந்து அந்தத் திட்டங்களை எல்லாம் மாவட்டங்களில் சிறப்பாக நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். தமிழகத்தின் சிறப்பு இந்திய ஒன்றியங்களில் பரவுகிறது. மக்கள் நம் முதல்வரையும் அரசையும் கொண்டாடுகிறார்கள். தேர்தல் வாக்குறுதியில் அறிவிக்கப்பட்ட பல்வேறு வாக்குறுதிகள் 20 மாதங்களில் நிறைவேற்றப்பட்டு உள்ளது. இன்னும் மூன்று வருடங்கள் உள்ளது தேர்தல் வாக்குறுதியில் சொன்ன அனைத்தையும் நம்முடைய முதல்வர் அவர்கள் 100% முடித்து வைப்பார்கள். அதேபோல் உங்களுக்கு தேவையான உதவிகள் என்றால் என்னை எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கெல்லாம் ஒரு அண்ணனாக, தம்பியாக, மகனாக, பேரனாக, எப்போதும் என்னால் முடிந்த அளவுக்கு உங்கள் வீட்டு செல்ல பிள்ளையாக இருந்து உங்கள் தேவைகளெல்லாம் அறிந்து பணிகளை செய்து கொடுப்பேன்.

மேலும், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்து கொண்டதற்கிணங்க விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக கரூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் பழுதடைந்த பணிகளை சீரமைப்பு செய்தல், மின்சார அமைப்புகளை பழுது பார்த்தல் மற்றும் பாதுகாவலர் அறை அமைத்தல் ஆகியவற்றிற்காக ரூ.59.29 லட்சம் 2022–23 ஆம் ஆண்டின் பராமரிப்பு நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், விளையாட்டு அரங்க கட்டமைப்புகளை மேம்படுத்தும் பொருட்டு டென்னிஸ் மைதானம் அமைக்க

ரூபாய் லட்சம் மற்றும் உடற்பயிற்சி கூடம் அமைக்க ரூ.56.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.78.00 இலட்சம், 2022-23 ஆம் ஆண்டின் முதன்மை பணிகள் (கேப்பிட்டல் ஒர்க்ஸ் ஃபண்ட்) நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி.செந்தில் பாலாஜி அவர்கள், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முனைவர் அதுல்யா மிஸ்ரா,இ.ஆ.ப., அவர்கள், செயல் இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் திருமதி பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர்.இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ.மேகநாதரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஏ.சுந்தரவதனம், இ.கா.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஆர்.மாணிக்கம் (குளித்தலை), திரு. ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி) திருமதி க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் திருமதி வெ.கவிதா, துணை மேயர் திரு. பா.சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர்கள் திரு.எம்.லியாகத், திருமதி கவிதா (நிலம் எடுப்பு), திட்ட இயக்குநர்கள் திருமதி வாணி ஈஸ்வரி (ஊரக வளர்ச்சி), திரு.சீனிவாசன், கூட்டுறவுத்துறை இணை பதிவாளர் திரு. கந்தராசா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in